[2018 மே 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

100—

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி

***4790—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியம், மதுராபுரி ஊராட்சியில் உள்ள நரிக்குறவர் குடியிருப்பில் பழங்குடியினருக்கு உண்டி உறைவிடப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

தொன்மை வாய்ந்த இந்த சபையில் திருவுருவப் படத்திற்குள் நின்று, எங்களுக்கு நாளும் பாடம் நடத்திக்கொண்டிருக்கும் தங்க நிகர் சிங்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். அரசியலில் பெரியார் என்றால் துணிவு, அண்ணா என்றால் அறிவு, எம்.ஜி.ஆர். என்றால் ஈகை, அம்மா என்றால் வீரம். இந்த வரிசையில் சோதனைகளை சாதனைகளாக மாற்றக்கூடிய சரித்திர மனிதர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் என்று நாளைய உலகம் நன்றே கூறும். இல்லை, இன்றே கூறும். மாண்புமிகு அண்ணன் அவர்களையும், பண்பாட்டிற்குரிய துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்கி என்னுடைய பதிலை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நரிக்குறவர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது குறித்த மத்திய அரசின் ஆணை தற்போது வரை பெறப்படாமல் உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை

2018 மே 31]

நரிக்குறவர் இனம் தற்போது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளது. இச்சூழ்நிலையில் துறையூர் தொகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியம், மதுராபுரி ஊராட்சியில் உள்ள நரிக்குறவர் குடியிருப்பில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி துவக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், இருக்கையில் இல்லை. வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. பிரதான எதிர்க் கட்சி உறுப்பினர்களை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முயற்சி மேற்கொள்ளக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டெர்லைட் ஆலையை முழுமையாக மூடுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்வது மற்றும் மத்திய அரசு அளித்திருக்கும் லைசென்சை இரத்து செய்ய வலியுறுத்தி பரிந்துரைப்பது, இதுபோன்ற மேல்நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையில் அரசு உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த ஆலையை மூடுவதற்கான அறிவிப்பைத் தந்து அதற்குண்டான அரசாணையையும் பிறப்பித்திருக்கிறார்கள்.*

ஆனால், அதேநேரம் அந்த ஆலையின் லைசென்சை இரத்து செய்வது போன்ற பல்வேறு மேல்நடவடிக்கைகளைப் பற்றியும், அவற்றை அமல்படுத்தும் விதத்தையும் அரசின் முடிவையும் முழுமையாகத் தெரியபடுத்தும் விதத்தில் சட்டமன்றத் தீர்மானமாக நிறைவேற்றி, மத்திய அரசுக்கு ஒருமித்த தீர்மானமாக அனுப்பிவைக்க வேண்டும். பிரதான எதிர்க்கட்சியினர் இன்றைக்கு வெளியிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற நேர்வுகளில்